Stiftung Lesen

# நிழல்பட மற்றும் திரைப்படப் பதிவுகளின் பயன்பாடு பற்றிய ஒப்புதல் விளக்கம்

எனது கையொப்பத்தை இடுவதன் மூலமாக, வாசித்தல் என்னும் அறக்கட்டளை நிதியத்தின் பணியாளர்கள் என்னிடமிருந்தோ அல்லது நான் பிரதிநிதித்துவப்படுத்தும் (பதினெட்டு வயதுக்குட்பட்ட) சிறுவர்கள் அல்லது அவர்களின் சட்ட ரீதியான பராமரிப்பு நபரிடமிருந்தோ,

...............................................

ந் திகதி

**கீழே குறிப்பிடப்பட்ட பட்டறை / கருத்தரங்கு நிகழ்வு தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில்**

..........................................................................................................................................

இல்

..........................................................................................................................................

நிறுவனம், முகவரி

எடுக்கப்பட்ட நிழல்பட மற்றும் திரைப்படப் பதிவுகளை கீழே குறிப்பிடப்பட்ட சமஸ்டிக் காரியாலயத்தின் (BMBF-) ஊக்குவிப்பு செயற்திட்டத்தின் வரையறைகுட்பட்ட „கலாச்சாரம் உங்களைப் பலப்படுத்துகின்றது, கல்விக்கான ஒன்றியங்கள்„மற்றும் இதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து பொது வேலைத் திட்ட பங்காளிகளின் வாசித்தல் கழகங்கள் அல்லது ஊடக ஆய்வு கூடங்கள் பற்றி அறிக்கையிடுதல் பற்றி ஊடகங்களில் வெளியிடுவதற்கும் பரப்புவதற்கும் இத்தால் நான் ஒப்புதளிக்கின்றேன்.

## தனிநபர் தகவல்கள்:

..........................................................................................................................................

பிள்ளையின் பெயர், முதற்பெயர்

- ○ **மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட நிழல்பட மற்றும் திரைப்படப் பதிவுகள் வாசித்தல் என்னும் அறக்கட்டளை நிதியம் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட அவர்களின் அச்சு ஊடகங்கள் (உதாரணமாக, சிறிய கைநூல்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், ஆண்டறிக்கை), இணையம் (உதாரணமாக, இணையத்தளம், சமூக ஊடகங்களின் தளங்கள்), உள்ளக இணைய வலையமைப்பு மற்றும் ஏனைய ஊடகங்கள் போன்றவற்றில் ( உதாரணமாக தொலைக்காட்சி, தினசரி பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் பொது ஊடகங்களின் சமூக சேனல்கள்) திட்டமிடல் பங்காளிகளினால் பயன்படுத்தப்படலாமென இத்தால் நான் ஒப்புதலளிக்கின்றேன்.**

Kultur macht STARK
Bündnisse für Bildung
GEFÖRDERT VOM
Bundesministerium für Bildung und Forschung

நான் வழங்கிய ஒப்புதல் எந்த நேரத்திலும் முழுமையாக அல்லது பகுதியாக மீளப்பெற முடியும். மீளப் பெறுதல் எதிர்காலத்துக்கு மட்டுமே செல்லுபடியாகும். ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அச்சு மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் அவற்றின் புதிய பதிப்பு வரை மீளப் பெறப்படுவதிலிந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

*மீளப் பெறப்படல் கீழ்வரும் நிலையத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்: Stiftung Lesen, Römerwall 40, 55131 Mainz.*

இவ் ஒப்புதல் விளக்கக் கடிதமானது சுய விருப்பின் பேரில் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் நான் ஒப்புதளிக்காவிடில் அதனூடாக தீமைகள் எதுவுமில்லை என்பதையும் நான் அறிவேன். இவ் ஒப்புதல் விளக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள தகவல்களை நான்  கவனத்தில் எடுத்துள்ளேன் எனவும் எவ்வாறான தேவைகளுக்கு தனிப்பட்ட பதிவுகள் பயன்படுத்தபடும் என்பதும் எனக்குத் தெரியம்.

..............................................................................................................................................

நிழல்படம் மற்றும் திரைப்படம் எடுத்த இடம் + திகதி, கையொப்பம்

......................................................................................................................................

(பதினெட்டு வயதுக்குட்பட்ட) சிறுவர்கள் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர் இருப்பின்,  அவரது கையொப்பம் அல்லது பராமரிப்பாளரின் கையொப்பம்

## தனிப்பட்ட தரவுகள், புகைப்படங்கள் அல்லது திரைப்படங்களை இணையத்தில் வெளியிடுவது பற்றிய தகவல்கள்

இணைய வலைத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் உத்தேசிக்கப்பட்டிருக்கும் பயன்பாட்டின் மூலம், மேற்படி படங்களை உலகளாவிய ரீதியில் அணுகுவதற்கான வாய்ப்பு அல்லது அங்கு பதிவேற்றம் செய்யப்படப்பட்ட தரவுகள் மற்றும் படங்களை மீட்டெடுப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். தரவுகள் பாதுகாப்பு தராதரம் எதுவுமற்ற அல்லது போதுமானதாக இல்லாத நாடுகள் இதனை பயன்படுத்துவதும் கூட இதில் அடங்கும். இணையம் வழியாக இத் தரவுகளை அணுகுவதையோ அல்லது இவற்றை பயன்படுத்துவதையோ வாசித்தல் அறக்கட்டளை பாதிக்காது என்பதனால் தரவுகள் பாதுகாப்பைக் கடைப்பிடிப்பதில் எந்தப் பொறுப்பையும் ஏற்க முடியாது.

பொருத்தமான தேடுபொறிகள் மூலம், தனிநபர் தரவுகளை இணையத்தில் கண்டறிய முடியும் என்பதுடன் படங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள நபர்களையும் கூட சில சூழ்நிலைகளில் அடையாளம் காண முடியும். இத் தரவுகள் மற்றும் தகவல்களை இணையத்தில் கிடைக்கும் பிற தரவுகளுடன் ஒன்றிணைப்பதன் மூலம் தனிமனித ஆளுமைக்கான கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கும் மேலதிக பயன்பாட்டு வாய்ப்புக்களைத் திறப்பதற்கும் இது உதவுகிறது, உதாரணமாக விளம்பரத் தேவைகளுக்காக. உலகளாவிய ரீதியில் மற்ற நிலையங்கள் அல்லது நபர்களினால் தரவுகளை மீட்டெடுப்பதற்கும் சேமிப்பதற்கும் சாத்தியம் இருப்பதால், பிற நிலையங்கள் அல்லது நபர்கலினால் மேலும் பயன்படுத்தப்படுவது அல்லது தேடுபொறிகளின் காப்பக செயல்பாடுகளின் மூலம் காணப்படுவது ஒப்புதல் மீளப் பெறப்படுதுவதுடன் அவை எங்கள் இணைய வலைத்தளப் பக்கத்திலிருந்து அகற்றப்பட்ட போதிலும் உங்கள் தரவுகள் மற்றும் படங்கள் வேறு நிலையங்கள் அல்லது நபர்களினால் பயன்படுத்தப்படுகின்றமை அல்லது தேடுபொறிகளின் காப்பக செயல்பாடுகளின் மூலம் காணப்படுவதை நிராகரிக்க முடியாது.

## ஐரோப்பிய ஒன்றிய தரவுகள் பாதுகாப்பு அடிப்படை ஒழுக்கக் கோவை, அத்தியாயம் 13 (13 EU-DS-GVO) இன் பிரகாரம் மேலதிக தகவல் (வழங்குவதற்கான) கடப்பாடு

இத் தரவுகள் பாதுகாப்பு குறிப்பு வாசிப்பு அறக்கட்டளை என்ன தேவைகளுக்காக உங்கள் தனிப்பட்ட தரவுகளை (கீழ்வருவனவற்றில் „நாம்“ அல்லது „எம்மை“ எனக் குறிப்பிடப்படுகின்றது) பாவிகின்றது என்பது பற்றி உங்களுக்கு அறிவிக்கும் நோக்கம் கொண்டது. தனிப்பட்ட நபர் பற்றிய தரவுகள் என்பது உங்கள் தனிநபருடன் தொடர்புடைய அனைத்து தகவல்களுமாகும். கீழ்வரும் தகவல்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகளின் செயலாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கும் அவை பற்றிய வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும் உதவும்.

தயாரிக்கப்பட்ட புகைப்படம் மற்றும் திரைப்பட பதிவுகள் மற்றும் சித்தரிக்கப்பட்ட நபரின் குடும்பப்பெயர் மற்றும் முதல் பெயர் ஆகியவை உலக புத்தக தினத்தை அறிக்கையிடுவது தொடர்பாக ஒப்புதலளிக்கப்பட்டு அங்கே குறிப்பிடப்பட்ட ஊடகங்களுக்கும், வாசித்தல் அறக்கட்டளை மற்றும் அதன் திட்ட பங்காளிகளின் [இங்கே: ஜேர்மன் புத்தக பங்குச் சந்தை ஒன்றியம், ஜேர்மன் தபால் திணைக்கள டி.எச்.எல் (DHL) குழுமம், சி.பி.ஜே. (cbj) பதிப்பகம், ZDF] மக்கள் தொடர்பு பணிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

Kultur macht STARK
Bündnisse für Bildung
GEFÖRDERT VOM
Bundesministerium für Bildung und Forschung

மேலே குறிப்பிட்ட நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவுகளின் செயலாக்கத்துகான சட்டபூர்வ அடிப்படை இவ் ஒப்புதல் விளக்கமாகும். உங்களால் வழங்கப்படும் இவ் ஒப்புதலானது சுய விருப்பிலாகும். இதன் பொருள் யாதெனில், உங்கள் தனிநபர் பற்றிய தகவல்களை நீங்கள் கட்டாயமாக எமக்கு வழங்க வேண்டியதில்லை.  ஒப்புதல் அறிவிப்பை நீங்கள் வழங்குவதற்கு விரும்பவில்லையெனில், இது உங்களுக்கு எந்தவொரு பாதிப்புகளுடனும் தொடர்புபபட்டிருக்காது என்பதை நாங்கள் திட்டவட்டமாகக் குறிப்பிடுகின்றோம்.

சுயவிபரத்தை உள்ளடக்கிய தானியங்கு செயலாக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட, மற்றும் சட்டரீதியான விளைவைக் கொண்ட அல்லது உங்களை பாதிக்கும் எந்தவொரு இயல்பாகவே முடிவெடுக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை.

வாசித்தல் அறக்கட்டளையானது தயாரிக்கப்பட்ட பதிவுகளை பயன்படுத்துவதில் முறையான ஆர்வம் இருக்கும் வரை அல்லது சம்பந்தப்பட்டவர்கள் பதிவுகள் பயன்படுத்தப்படடுவதை எதிர்த்து மீளப் பெறும்வரை அவற்றை ஆவணப்படுத்தி வைத்திருக்கும். ஒப்புதல் வழங்கப்பட்மையை மீளப்பெறல் எதிர்காலத்துக்கே நடைமுறைக்கு வருகின்றது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அச்சுருவிலான மற்றும் டிஜிட்டல் ஊடகப் பதிவுகள் அவை வெளியாகும்வரை அவற்றிற்கு விலக்களிக்கப்பட்டுள்ளன.

தவிரவும் தரவுகள் பாதுகாப்பு அடிப்படைச் சட்டக் கோவையின் (DSGVO) அத்தியாயம் 17 உபபிரிவு  1 இன் கீழ் வரும்   நிபந்தனைகளுள் ஒன்று செல்லுபடியாகும் பட்சத்திலும் சட்ட ரீதியில் பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய கடப்பாடுகள்
முரண்பாடாதிருக்கும்  பட்சத்திலும் இவை நீக்கப்படும்.

ஐரோப்பிய ஒன்றிய தரவுகள் பாதுகாப்பு அடிப்படை ஒழுக்கக் கோவையின் விதிகளின் பிரகாரம் எங்களுக்கு எதிராக கீழ்வரும் சட்ட உரிமைகளை நீங்கள் வலியுறத்த முடியும்:

- தகவல் (பெறுவதற்கான) உரிமை
- திருத்தம் செய்வதற்கான உரிமை
- நடைமுறைப்படுத்துவதை மட்டுப்படுத்துவதற்கான உரிமை
- நீக்குவதற்கான (அழிப்பதற்கான) உரிமை / மறக்கும் உரிமை
- தரவுகள் பரிமாற்றத்துக்கான உரிமை

Kultur macht STARK
Bündnisse für Bildung
GEFÖRDERT VOM
Bundesministerium für Bildung und Forschung

மேலும் இவ் ஒப்புதலளித்தலை எந் நேரமும் மீளப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. ஒப்புதளித்தமையை மீளப் பெறுவதன் மூலம்  திரும்பப் பெறும் வரை ஒப்புதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் செயலாக்கத்தின் சட்டபூர்வமான தன்மை பாதிக்கப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உங்கள் உரிமைகளில் ஒன்றை செல்லுபடியாகும் முகமாக, நீங்கள் எப்போது வேண்டுமானாலும் எங்களை தொடர்பு கொள்ளலாம்: Andrea Bartl, kaufm. Geschäftsführung, Römerwall 40, 55131 Mainz, per E-Mail: andrea.bartl@stiftunglesen.de.

உங்கள் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் அனுமதிக்க முடியாத வகையில் செயல்படுத்துகிறோம் என்று நீங்கள் கருதினால், தயவுசெய்து எங்கள் தரவுகள் பாதுகாப்பு அதிகாரியைத் தொடர்பு கொள்ளுங்கள். அவரை கீழ்வரும் தொடர்புகளையுடைய தரவுகளின் கீழ் தொடர்பு கொள்ள முடியும்: SPIE GmbH, z.Hd. Herrn Dr. Anton Peuser, Lyoner Straße 9, 60528 Frankfurt am Main.

தரவுகள் பாதுகாப்பை மேற்பார்வை செய்யும் அதிகாரிகளை தொடர்பு கொள்வதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. அதற்குப் பொறுப்பான மேற்பார்வை செய்யும் அலுவலகம்: (தகவல் பாதுகாப்பு மாநில அதிகாரி மற்றும் றையன்லான்ட்-பால்ஸ் மாநில  தகவல் பெறுவதற்கான உரிமை)  Der Landesbeauftragte für den Datenschutz und die Informationsfreiheit Rheinland-Pfalz, Postfach 30 40, 55020 Mainz.

Kultur macht STARK
Bündnisse für Bildung
GEFÖRDERT VOM
Bundesministerium für Bildung und Forschung